புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

================================================================================

# நாயக மாலை இலக்கியத்தில் மனித வாழ்வியல்

**ஆ. யாஸ்மின்,**
முழுநேர முனைவர்பட்ட ஆய்வாளர்,
Thanthai Periyar Government Arts & Science College, திருச்சிராப்பள்ளி - 23

================================================================================

**ஆய்வுச்சுருக்கம்**

இஸ்லாமியத் தமிழ்ப் புலவர்கள் சிற்றிலக்கியங்களைப் படைத்து தமிழுக்கு பெருமை சேர்த்துள்ளார்கள். மேலும் புது வகையான சிற்றிலக்கியங்களையும் படைத்து புதுமைகள் செய்து உள்ளதை அறிய முடிகிறது. அவ்வாறு படைக்கப்படும் இலக்கியங்களில் குர்ஆன், நபிமொழி ஆகிய அடிப்படையில் இஸ்லாமிய நெறிகளுக்கே உட்பட்ட இலக்கியங்களை படைத்து தன்னுடைய பங்களிப்பை ஆற்றியுள்ளார்கள். அக்கால வரிசையில் இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தமிழுக்கு இனிமை சேர்த்தவர் இறையருட் கவிமணி கா.அப்துல் கபுரால் ஏற்றப்பட்ட நாயக மாலையில் நபிகள் நாயகத்தின் சொல், செயல் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவைகளை மனிதஇனம் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறிய கருத்துக்களையும், அறிவுரைகளையும் ஏற்று நடந்தால் மனிதவாழ்வியல் சிறப்புறும் என்பதை இக்கட்டுரை ஆய்வு செய்கிறது.

**கலைச்சொற்கள்**

நபி, நபிமொழி, குர்ஆன், ரவுலா ஷரிப், நாயகமாலை, பாமாலை, சதக்கா, வெகுளி, கோபம், துயில்.

## முன்னுரை

நா வினிக்க நெஞ்சினிக்க நயம்பட அமையும் பாடல்களைக் கொண்டமைந்த “நாயகமாலை“, நாடு போற்றும் நற்கவிஞர், செந்தமிழ் செல்வர், இறையருள் கவிமணி, பேராசிரியர், அறிஞர் கா.அப்துல் கபுர் சாகிபு அவர்களால் தம் பதினெட்டாம் வயதில் இயற்றப் பெற்றதாகும். முதன் முதலில் இதன் முதல் பதிப்பு இலங்கையில் திருக்குர்ஆன் இயக்கத்தாரால் 1954 ஆம் ஆண்டு ”நாயகமே” எனும் தலைப்பில் வெளியிடப்பட்டது. தொடர்ந்து பல பதிப்புகளைப் பெற்றது. நபிகள் நாயகத்தின் அடக்கஸ்தலமான ரௌலாவில் கவிஞரால் பாடி நினைவு கூறப்பட்ட அருள் கவிதை இதுவென்பதும் எடுத்துரைப்பதற்கு இனிய செய்தியாகும். மௌலான மௌலவி அல்லாமா அப்துல் வஹாப் சாகிபின் ஆச்சர்யமான விளக்கத்துடன் இசைமுரசு ஈ.எம். ஹனீபாவின் தேனினும் இனிய தீன்குரலில், இதயங்கள் இசைவுபெற இசைத் தட்டாகவும் இப்பாமாலை இலங்கிச் சிறந்தது. வீடுகளில், மதரசாக்களில், மாநாடுகளில், மஜ்லிசுகளில், வானொலிகளில் பல்லாண்டுகளாக இப்பாசுரம் பாசமுடன் பாடப்பெற்றது குறிப்பிடத்தக்கது. 1986இல் விளக்கத்துடன் ஒரு பதிப்பு வெளியிடப்பட்டதாகவும் அறிய முடிகின்றது. இறைநபி, இறைநேசச்செல்வர்கள் பெயரால் பாடப்பட்டு அவ்வப்போது வெளியிடப்பட்டுச் சூட்டப்பட்ட ”பதினெட்டு பாமாலைகள்” ஒன்றிணைத்து ஒரே தொகுதியாய்ப் ”பாமாலை பதினெட்டு” என்ற பெயரால் 1999 இல் பதிப்பித்து வெளியிட்டபோது இதன் பெயர் ”நாயக மாலை” எனக் குறிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

## அமைப்பு

நாயகமாலை ஈரடிக் கண்ணிகளால் ஆன 120 பாடல்களைக் கொண்டதாகும். ஒவ்வொரு பாடலும் எட்டுச் சொற்றொடர்க் கூறுகளால் அமைக்கப்பட்டது.

**ஒன்றிறைவன் ஒன்று குலம்**
**ஒன்று நிறை என்றருளி**
**மன்பதைகள் பிணிநீக்கும்**
**மருந்தாக்கும் நாயகமே *(பாடல் -15)***

*எனும் அமைப்பில் இலக்கிய ஆக்க நெறிக்கேற்ப முதல் பாடலின் முதல் அடி இறை வாழ்த்தாகவும் இரண்டாவது அடி இறைத்தூதர் வாழ்த்தாகவும் அமையப் பெற்றதாகும்.*

**மனித வாழ்வியல்**

*சமூகத்தில் முழுமையும் மகிழ்ச்சியும் அமைமதியும் நிலவ வேண்டுமெனில் ஒவ்வொரு தனிமனிதனும் தனக்கென்று சில கடமைகளையும், கட்டுப்பாடுகளையும் ஒழுக்கங்களையும் விதித்துக் கொள்ள வேண்டும். இந்தக் கடமைகள் மற்றும் கட்டுப்பாடுகளின் தொகுப்புகளைத்தான் நாம் வாழ்வியல் நெறிகள் என்று கூறுகிறோம்.*

*அன்றாட செயற்பாடுகள், பழக்கவழக்கங்கள், பொருள் உளவியல் தேவைகள், பொழுதுபோக்குகள், உறவாடல்கள், வேலை குடும்ப சூழ்நிலைகள் என வாழ்க்கையின் நாளாந்த வாழ்வியல் அம்சங்களை அன்றாட வாழ்வியலை குறிக்கின்றது. பொருளாதாரம், தனிமனித நிலைகளைக் கடந்து அன்றாடம் ஒவ்வொரு மனிதனும் செய்யும் செயற்பாடுகள் பல உள்ளன.*

**நாயக மாலை செய்திகள்**

*ஒன்று முதல் 120 வரை கண்ணிகளால் அமைக்கப்பட்டது. நாயகமாலை இம்மாலையில் நபிகள் நாயகத்தின் பொன்மொழிகளை விளக்கமாக எடுத்துரைக்கின்ற மாலை இலக்கியமாகும். ஒவ்வொரு பாடலிலும் தனிமனித ஒழுக்கம், மனிதமாண்புகள், பிறருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் பழக்க வழக்கங்கள் ஆகியவற்றை நாயக மாலை எடுத்துரைக்கிறது.*

*இஸ்லாமியர் ஒவ்வொருவரும் குர்ஆன், நபிமொழி இரண்டை பின்பற்ற வேண்டியது கட்டாய கடமையாகும். அவ்வகையில் மனித இனத்திற்கு நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வாழ்ந்து காட்டிய சொல், செயல் ஆகியவற்றை பின்பற்றி நடப்பது ஒவ்வொரு முஸ்லிமான ஆண்பெண் மக்களுக்கு கட்டாயக் கடமையாகும்.*

**நாவுகரம்**

*ஒவ்வொரு மனிதர்களும் நாவையும், கரத்தையும் பேணிக் காக்க வேண்டிய கட்டாய கடமைகளில் ஒன்றாகும். இதை ஒவ்வொரு முஸ்லிம்களும் கடமையாக கருதி பின்பற்றி நடந்தால் தான் நபிகள் நாயகத்தை பின்பற்றியதாக கருதப்படுவர் இதனைக் கவிஞர் கா.அப்துல் கபுர் நபி வழியாக,*

**எவர் நாவால் கரங்களினால் எழிலுறுமோ மனிதகுலம்**
**அவர்சிறந்த முஸ்லிமென அருளும் பின் நாயகமே *(பா.50)***

*என்று பாடுகிறார். எம்மனிதர்கள் நாவால், கரங்களில் எழில்படுமே அம்மனிதரும் சிறந்த மனித குலமா மாறி சிறந்த முஸ்லிமாக ஆவார்.*

**கூலி கொடுத்தல்**

*உழைப்பாளி வர்க்கத்திற்கு கூலியை காலம் தாழ்த்தாமல் உடனே வழங்கி வாழ்வியலை உயர்த்த வேண்டும் என்பது தான் மனித வாழ்வியலில் ஒன்றாகும். அவ்வாழ்வியலை நபிகளார் கூறுவதாக கா.அப்துல் கபுர்*

**வியர்வையது உலருமுன்னர் வேலை செய்வோர் கூலியினை**
**நயமாகக் கொடுப்பதற்கு நவின்ற நபி நாயகமே *(பா.57)***

*என்று மொழிகிறார். தொழிலாளிக்கு வேலைக்கான ஊதியத்தை அவருடைய வியர்வை உலருவதற்கு முன்னால் கூலியை கொடுத்து அவருடைய வாழ்வை சிறப்பாக்க வேண்டும் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் மனித வாழ்வியலைக் காக்க வேண்டும் என்பதை அறிவுறுத்துகிறார்.*

**இன்சொல்**

*யாருடைய மனத்தையும் புண்படுத்தாமல் இனிமையாயப் பேசிப்பழகுவது பெருங்கொடை என இஸ்லாம் நெறி கூறுகிறது. இன்சொல் பேசுவது தருமம் போன்றதாகும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள் அதேபோல மன்னித்தலும் சிறந்த நற்குணம் என்று இஸ்லாமிய நெறி*

***கனிவான இனிய சொற்களும் மன்னித்தலும்***
***ஸதக்காவை விட மேன்மை யாகும் (02:263)***

*என்றும்,*

***கேட்போருக்குக் கொடுக்க எதுவும் இல்லையெனில்***
***கனிவான இனிய வார்த்தைகளால் பேச வேண்டும் (17:28)***

*என்று அருள்மறை கூறுகிறது.*

*துன்பப்படுவோர் மனப்பிணியை போக்குவதற்கு வார்த்தைகளில் இன்சொல்லை கொடுப்பது பெருங்கொடையாகும் என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறுவதாக கா.அப்துல் கபுர்*

***துன்புறுவோர் மனப்பிணியைத் துடைப்பற்கா யுதித்திடுமோர்***
***இன்சொல்லே பெருங்கொடையென் றியம்புமுபின் நாயகமே (பா.60)***

*என்று கூறுகிறார்.*

**உண்மை**

*மக்கள் தங்களது வாழ்வை உண்மையின் அடிப்படையில் அமைத்துக் கொள்ள வேண்டும். உண்மைதான் என்றைக்கும் நிலையானது. எனவே இஸ்லாமியர்களின் தங்கள் ஒழுக்க மாண்புகளில் உண்மைக்கும் நேர்மைக்கும் அதிக முக்கியத்துவம் தர வேண்டும் என வலியுறுத்துகிறது இஸ்லாம் என்பதை,*

***உண்மையைக் கொண்டு வந்ததும் அதை ஏற்பவர்கள்***
***தான் பயபக்தியுடையவர்கள் (39:33)***

*என்று திருமறையும்,*

***உள்ளத்தால் சொல் செயலில் உண்மையுடன் இருப்பவரைக்***
***கள்ளமிலா உத்தமராய்க் கண்டயாசீன் நபி நாயகமே (பா.61)***

*என்று பாடலில் நபிமொழி வாயிலாக கா.அப்துல் கபுர் எடுத்துக் காட்டுகிறார்.*

**நற்செயல்கள்**

*மனிதர்கள் நற்செயல்கள் செய்து இறை நம்பிக்கையுடன் வாழ வேண்டும். எவ்வளவு வசதி வாய்ந்த மனிதராக இருந்தாலும் தன்னுடைய வேலையை தானே செய்ய வேண்டும். இஸ்லாமியர்களின் இறுதித் தூதுவர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் வீட்டை சுத்தம் செய்வார்கள், பால் கறப்பார்கள், துணி துவைப்பார்கள், கிழிந்த துணியை தைப்பார்கள், மற்றவர்களுக்கு உதவியும் செய்பவர்களாக இருந்தார்கள் என்பதை கா.அப்துல் கபுர் தன்னுடைய நாயக மாலையில்,*

***பாதுகையைச் செப்பனிட்டீர் பால் கறந்தீர் துணி தைத்தீர்***
***யாதுமற்றோர்க் குதவி நின்றீர் யாவருக்கும் நாயகமே (பா.73)***

*என்று இயம்புகிறார்.*

**நட்பு**

*நட்பு ஒவ்வொரு மனிதனின் தனிப்பட்ட வாழ்க்கையிலும், கூட்டு வாழ்க்கையிலும் மிகப்பெரும் மாற்றங்களைக் கொண்டு வரும் வன்மை மிக்கது. மனிதர்கள் தங்கள் வாழ்க்கையில் ஏற்படுத்திக் கொள்ளும் நட்பு, தோழமை ஆகியவற்றிற்கும் இஸ்லாம் மிகவும் அதிகமான முக்கியத்துவத்தைத் தருகிறது.*

*என்பதை,*

***கண்ணியம் பெறுவதற்காக இறை நம்பிக்கையாளர்களை விட்டும்***
***மற்றவர்களை உற்ற நண்பர்களாக்கிக் கொள்ளாதீர்கள் (04:89)***

எனத் திருமறை அருள்கிறது. நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் தன் தோழர்களிடம் அழகிய முறையில் நடந்து கொண்டார்கள். தன்னை கொலை செய்ய வந்த நபரை தோழர்களிடம் நன்முறையில் நடந்து கொண்டார்கள் என்பதை கா.அப்துல் கபுர் அவர்கள் பதிவு செய்வதைக் காணலாம்.

**பணியாளர் அனஸென்பார் பத்தாண்டு பணியாற்றி**
**அணிபோலும் வாழ்வதனால் அகநெகிழ்ந்தார் நாயகமே**

என்றும்,

**வாளெடுத்து வெட்ட வந்து வழியிடையே மறைகேட்டுத்**
**தாளடைந்த வீரருமர் தமையனைந்த நாயகமே (பா.87)**

என்று நாயக மாலையில் கூறுவதாக கா.அப்துல் கபுர் எடுத்தியம்புகிறார். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் தோழர் அனஸ்(ரலி) அவர்கள் பத்தாண்டு ஊழியம் செய்த தோழர் அவர்கள் ஒருநாள் கூட கோபப்பட்டதில்லை என்று கூறுவதைக் காண முடிகிறது. தன்னை கொலை செய்ய வந்த உமறு(ரலி) அவர்கள் மறை ஓதும் செய்தியைக் கேட்டு வாளை கீழே விட்டு நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் பால் இஸ்லாத்தை ஏற்று நாயகம் (ஸல) அவர்களை தோழனாக ஏற்றபின்னர் கலீபா பதவியை அடைந்தார்கள் என்ற வரலாற்று உண்மையை அறிய முடிகிறது இதுதான் மனிதவியல் ஆகும்.

**மது**

மது மனிதனை அறிவிழக்கச் செய்யும் எல்லா தீமைகளுக்கும் ஆணிவேராக உள்ளது. மதுவின் தீமைகள் குறித்து இறைவனால் அருளப்பட்ட இறைமறையில் பல வசனங்கள் அருளப்பட்டன அவைகளாவன,

**நபியே மது மற்றும் சூதாட்டம் பற்றி உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறுவீராக**
**அவ்விரண்டிலும் பெருங்கேடு இருக்கிறது. அவற்றில் மக்களுக்குச் சிறிது பயன்கள்**
**இருப்பினும் அவற்றினால் ஏற்படும் பாவம் அவற்றின் பயனைவிட அதிகமாக இருக்கிறது.**
**(2:219)**

என்று திருமறையும்,

**குடிவெறியில் மூழ்கியவர் குடமுடைந்து மதுவெறுக்கும்**
**படிசெய்த காட்சியினைப் படைத்த பஷீர் நாயகமே(பா.101)**

என்றும்

**மதுவெறியில் இனவெறியில் மனமிழந்த மக்கள்தமைப்**
**புதுநெறியிற் போக்கியுயர் புகமுட்டும் நாயகமே (பா.102)**

என்று நபிமொழியும் பகர்கின்றன. மது அருந்துவதினால் இனவெறியில் மூழ்கி மனமிழந்து காணப்படுவார்கள் மதுகுடிக்காமல் இருப்பதினால் புதுநெறி ஏற்படும் மனித வாழ்வியலை அறிமுகப்படுத்துவதைக் காணலாம்.

**அனாதைகளை அரவணைத்தல்**

தாய் தந்தையரை இழந்தவர்களுக்கு உதவுவது கட்டாயக்கடமை என்று நபிபெருமானார் கூறினார்கள் என்று இஸ்லாமிய நெறி போதிக்கிறது. தெருவழியாக பெருநாள் தொழுகைக்காகச் செல்கிறார்கள். அத்தெருவில் அழுது கொண்டிருந்த அனாதைக் குழந்தையை அணைத்துக் கொண்டு அக்குழந்தையை தன் கரங்களால் பற்றிக் கொண்டார்கள் என்பதை இறையருட் கவிமணி கா.அப்துல் கபுர்,

**அநாதைகளை அரவணையுங்கள் மேலும் ஏழைகளுக்கு**
**உணவு அளிக்கும்படி மக்களைத் தூண்டுங்கள் (89.17)**

என்று திருமறை கூறுகிறது. அநாதையை அரவணைப்பது, ஏழைகளுக்கு உணவு அளிக்கும்படி மக்களுக்கு ஆர்வமூட்டல் இது யாவும் நற்பாக்கியம் ஆகும் என்று அனாதைகளையும் ஆதரவற்றவர்களையும் அரவணைக்க வேண்டுமெனத் திருமறை கூறுகிறது. இதனை கா.அப்துல் கபுர்,

**தெருவிடையே பெருநாளில் தேம்பியழும் அனாதையினை**
**அருமையுடன் அனைத்தெடுத்தே அலங்காரமே நாயகமே (பா.70)**

**நன்னடத்தை**

*மனித வாழ்வில் பின்பற்ற வேண்டிய நன்னடத்தைகள் பல உள்ளன. அவற்றைப் பின்பற்றி வாழ்ந்தால் வாழ்வு சிறப்புறும். இவற்றுள் இன்னா செய்தாலும் இனியவைகளையே செய்ய வேண்டும் என்று நபிகள் நாயகம் (ஸல்) கூறினார்கள் என்பதைக் கவிஞர் கா.அப்துல் கபுர்,*

**இன்னாத செய்தவர்களுக்கும் இனியவே செய்யாக்கால்**
**என்ன பயன் சால்புதரும் என வாழ்ந்த நாயகமே**

*என்று இயம்புகிறார்.*

**கற்றோரை மதித்தல்**

*சீனதேசம் சென்றாயினும் கல்வி கற்றுக்கொள் – என்பது நபிமொழி. பிறச்செல்வங்கள் காட்டிலும் சிறந்தது கல்விச் செல்வம் அதனால் கல்வியின் சிறப்பை உணர்ந்த நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள், ஆனால் தான் படிக்கவில்லை பிறரை படிக்கும்படியும் கல்வி சிறப்புக்கு உகந்தது.*

**சீனாவிற் சென்றேனும் சீர்கல்வி பெறுகவெனத்**
**தேனான வாய்திறந்து வெளியுட்டும் நாயகமே**

*என்று நபிமொழி வாயிலாக கா.அப்துல் கபுர் குறிப்பிடுகிறார்.*

*கல்வியைத்தேடி பயணம் மேற்கொள்கிறறோ அவர் இறைவன் வழிப் பாதையில் உள்ளார் என்பதை நபிகளார் கூறுகின்றார்கள் இதனை,*

***அறிவடையச் சென்றிடுவோன் அதிலிருந்து திரும்புவரை***
***இறைவழியில் நின்றிடுமென் றியம்புகின்ற நாயகமே***

*என்று குறிப்பிடுகிறார்கள். போர்க்களத்தில் போர்செய்து இரத்தம் சிந்தி வெற்றிபெற்று பெறுவதை விட ஒரு எழுதுகோலைக் கொண்டு ஒரு எழுத்தைக் கற்றுக்கொள்வது உயர்வானது என்று நபிகள் நாயகம்(ஸல்) அவர்கள் கூறுகிறார்கள்.*

**போர்களத்தின்ன குருதியினும் போதமிடு எழுதுகோலின் ஓர்**
**துளிமை உயர்ந்ததென உரைத்த ரசூல் நாயகமே**

*என்று பாடுகிறார்.*

*கல்வியைக் கற்று அதன்படி செயல்படுபவர்கள் தான் பற்று உடையவர்கள் என்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நவின்றதாக கா.அப்துல் கபுர் தன்னுடைய பாடலில்,*

***கற்றறிந்தோன் யாவனெனில் கற்றதனைச் செயல்முறையில்***
***பற்றிடுவோன் உயர்ந்ததென உரைத்த பயகம்பர் நாயகமே (பா.54)*** *என்று இயம்புகிறார்.*

***முடிவுரை***

*இஸ்லாமியச் சிற்றிலக்கிய நாயகமாலை என்னும் இலக்கியத்தை கா.அப்துல் கபுர் படைத்துள்ளார். நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வாழ்க்கை நெறிகள் அவர்கள் கூறிய சொல் செயல் ஆகியவற்றை இரண்டடியில் பதிவு செய்கிறார். இஸ்லாமிய வாழ்க்கை நெறிபட வாழ வேண்டுமென்றால் இறைவனின் இறைத்தூதர் நபிகள் நாயகம்(ஸல்) அவர்களின் வார்த்தைகளை அடிபிறழாமல் நடந்து ஒழுக வேண்டும் இதனை இஸ்லாம் நபிவழி என்று அழைக்கப்படுகிறது.*

*மனிதர்கள் அனைவரும் இறைவனின் படைப்பாக இருக்கின்றனர். அம்மனிதர்களை மனிதர்களாக மதிக்கப்பட வேண்டும். கடமைகளையும் கட்டுபாடுகளையும் யாருக்கும் எவ்வித தொய்வின்றி கொடுத்திட வேண்டும் என்பதே இக்கட்டுரையில் செய்திகளை எடுத்துரைக்கின்றது.*

**ஆய்விற்கு பயன்பட்ட நூல்கள்**


1. இறையருட் கவிமணி கா.அப்துல் கபுர், பாமாலை-18, பொன்மொழிப் பதிப்பகம்,தக்கலை
2. அ.கா.அப்துல் ஹமீது சங்கைமிகு குர்ஆன் & சிறப்புமிகு தமிழாக்கம், தாருல் ஹுதா, இஸ்லாமிய நூல் வெளியீடு சென்னை – 14
3. ஹ.மு.நத்தர்சா, கா.அப்துல் கபுர் இந்திய இலக்கியச் சிற்பிகள், சாகித்ய அகாதெமி,Delhi.


********* ********* ********** ********* ********* ********** ********** **********